**<u>செய்தி வெளியீடு எண்.176</u>** **<u>நாள்.7.3.2008</u>**

பின்லாந்து நாட்டின் தலைநகர் ஹெல்சிங்கியில் 25.2.08 முதல் 28.2.08 வரை நடைபெற்ற நகர கழிவு மேலாண்மை குறித்த தொழில் நுட்ப கருத்தரங்கில் தமிழக அரசின் சார்பில் கலந்து கொண்ட அரசு உயர் அதிகாரிகள் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களிடம் 7.3.2008 அன்று அறிக்கை சமர்ப்பித்தார்கள்.

பின்லாந்து நாட்டில் சிட்ரா எனப்படும் அரசு அங்கீகாரம் பெற்ற அமைப்பின் முன்னாள் பிரதமர் திரு.எஸ்கோ ஆகா அவர்களின் அழைப்பை ஏற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர்.கே.கோபால், இ.ஆ.ப. சென்னை மாநகராட்சி துணை ஆணையர் (சுகாதாரம்) திரு.இரா.ஆனந்தகுமார், இ.ஆ.ப. மற்றும் குஜராத் மாநில அரசு உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள்.

இக்கருத்தரங்கில் தமிழக நகர உள்ளாட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் திடக் கழிவு மேலாண்மை குறித்தும், திரவக்கழிவு மேலாண்மை குறித்தும், கழிவுநீர் சுத்திகரிப்பு, புதைக்களம் போன்ற தொழில் நுட்பங்கள் குறித்து பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர்.கே.கோபால், இ.ஆ.ப. அவர்களால் விளக்கப்பட்டது. குறிப்பாக தகவல் தொழில் நுட்பத்தின் விளைவாக எழுந்துள்ள மின்னணு மற்றும் மின் பொருட்கள் கழிவுகள் பிரித்தாளும் தொழில்நுட்பம் குறித்து விரிவான கலந்தாய்வும் மேற்கொள்ளப்பட்டது. குப்பைகள் பிரித்தெடுத்தல், பதப்படுத்துதல், மறுசுழற்சி செய்தல், உரமாக்குதல் போன்ற நிகழ்வுகளை நேரில் கண்டறிந்தனர்.

இந்தக் கருத்தரங்கில் கற்றதும், பெற்றதும் அறிக்கையாக தயாரிக்கப்பட்டு மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்தார்கள். இதனை தொடர்ந்து இக்கருத்தரங்கம் குறித்து கணினி விளக்க படத்தொகுப்பு மூலம் விளக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் திரு.கே.தீனபந்து, இ.ஆ.ப. அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

***

வெளியீடு: இயக்குநர் செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.